
# அரசியலமைப்பின் செயல்பரப்பு மற்றும் உள்ளடக்கம்: கருத்துருவாக்கத் தலைவர்களின் கண்ணோட்டங்கள்

முடிவுகளின் சாராம்சம்



INTERNATIONAL IDEA
INSTITUTE FOR DEMOCRACY AND ELECTORAL ASSISTANCE

# அரசியலமைப்பின் செயல்பரப்பு மற்றும் உள்ளடக்கம்: கருத்துருவாக்கத் தலைவர்களின் கண்ணோட்டங்கள்

முடிவுகளின் சாராம்சம்

© 2022 Centre for Policy Alternatives, International IDEA and Edinburgh Centre for Constitutional Law

இன்டர்நெஷனல் IDEA பிரசுரங்கள் திட்டவட்டமான தேசிய அல்லது அரசியல் நலன்களிலிருந்து சுயாதீனமானவையாகும். இந்தப் பிரசுரத்தில் வெளியிடப்படும் கருத்துக்கள் இன்டர்நெஷனல் IDEA, சோஷல் இன்டிகேட்டர், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், அரசியல் அமைப்புச் சட்டத்திற்கான எடின்பரோ நிலையம் மற்றும் அவற்றின் சபை (சபைகள்) அல்லது அவற்றின் பேரவை உறுப்பினர்கள் ஆகிய தரப்புக்களின் கருத்துக்களை பிரதிநிதித்துவம் செய்யவில்லை.

இந்தப் பிரசுரத்தின் இலத்திரனியல் பதிப்பு வர்த்தக நோக்கற்ற விதத்தில் பகிர்ந்து கொள்ளும் 3.0 (CC BY-NC-SA 3.0) உரிமத்தின் கீழ் கிடைக்கின்றது. வர்த்தகம் சாராத நோக்கங்களுக்கென நீங்கள் இந்தப் பிரசுரத்தை தாராளமாக பிரதியெடுக்கவோ, விநியோகிக்கவோ அல்லது அனுப்பி வைக்கவோ முடியும். அத்துடன், மீளத் தொகுத்து, தழுவல்களை பெற்றுக் கொள்ளவும் முடியும். அவ்வாறு செய்யும் பொழுது, நீங்கள் இந்தப் பிரசுரத்தின் பெயரை உரிய விதத்தில் குறிப்பிடுதல் வேண்டும். அடையாளத்துடன் கூடிய உரிமத்தின் கீழ் அவற்றை நீங்கள் விநியோகம் செய்ய வேண்டும். இந்த உரிமம் தொடர்பாக மேலும் தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் இணையதளத்தைப் பார்க்கவும்: http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/

Design and layout: International IDEA
Copy-editor: சோஷல் இன்டிகேட்டர்
DOI: https://doi.org/10.31752/idea.2022.3

ISBN: 978-91-7671-517-8 (PDF)

# உள்ளடக்கம்


அறிமுகம் .......... 5

முறைமையியல் .......... 7

நிறைவேற்று சாராம்சம் .......... 8

1. தற்போதைய அரசியலமைப்பு .......... 9

அறிந்து வைத்திருக்கும் நிலை .......... 9
மாற்றத்திற்கான ஆதரவு .......... 10
சீர்திருத்தம் .......... 11

2. அரசியல் ஒழுங்கின் இயல்பு .......... 13

தலைமைத்துவம் .......... 13
ஜனநாயகம் .......... 14
நாட்டின் ஆளுகையில் செல்வாக்கு செலுத்தும் வாய்ப்பு .......... 14
தேர்தல்கள் .......... 15
அரசியலமைப்புக்கான விளக்கமளிக்கும் பொறுப்பு .......... 15

3. ஜனாதிபதி பதவி .......... 17

அதிகாரங்கள் .......... 17
பதவிக்காலம் .......... 19
சட்டபூர்வத் தன்மை .......... 19
தண்டனை விலக்கீட்டு உரிமை (Immunity) .......... 21

4. பொருளாதாரத்தின் இயல்பு .......... 22

பொருளாதார கொள்கை தொடர்பான கருத்துக்கள் .......... 22
அரச உடமை - தனியார் உடமை .......... 22
பொருளாதார இறைமை .......... 23

5. மனித உரிமைகள் .......... 24

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் .......... 24
சமூக - பொருளாதார உரித்துக்கள் .......... 27

6. நீதித்துறை தொடர்பாக....29

சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணல்....29
சுயாதீனம் ....29
சட்ட நடைமுறை....30

பங்காளர் நிறுவனங்கள் குறித்து....34

ஜனநாயகம் மற்றும் தேர்தலுக்கு உதவும் சர்வதேச நிறுவனம் (International IDEA) ....34
அரசியலமைப்பு சட்டத்துக்கான எடின்பரோ நிலையம் (ECCL) ....34
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (Centre for Policy Alternatives)....34
சோஷல் இண்டிகேட்டர் (Social Indicator)....35

# அறிமுகம்

2016ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 16ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தமது முதலாவது பாராளுமன்ற உரையில், உறுதியான நிர்வாகத்துறை மற்றும் சட்டத்துறைக்கான அரசியலமைப்பு மற்றும் தேர்தல் மறுசீரமைப்பிற்கு உறுதியளித்தார். 2015ஆம் ஆண்டு சித்திரை மாதம் முன்னைய அரசாங்கத்தினால் அரசியலமைப்பிற்குக் கொண்டுவரப்பட்ட பத்தொன்பதாவது திருத்தம் சீரான ஆட்சி, தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான பிரதான தடையாக இருப்பதாகக் குறிப்பிட்டார். 2020ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதியின் ஸ்ரீலங்கா பொதுஜன சுதந்திர கூட்டமைப்பின் சிறப்பான தேர்தல் வெற்றியானது அரசியலமைப்பு மறுசீரமைப்பினை செய்வதற்கான தெளிவான பணிப்பாணையை வழங்கியது. 2020ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 22ஆம் திகதி, பத்தொன்பதாம் திருத்தத்திற்கு பாரியளவில் பின்நோக்கியதான மாற்றங்களை ஏற்படுத்தியும் ஜனாதிபதியின் அதிகாரங்களை மீள் - உறுதிப்படுத்துவதுடன் பாராளுமன்றத்தையும், நீதிமன்றங்களையும் பலவீனப்படுத்துவதாகவும் அமையும் இருபதாவது திருத்தத்தை பாராளுமன்றம் நிறைவேற்றியது. மேலும், புதிய அரசியலமைப்பிற்கான ஆரம்பகட்ட வரைவிற்கு ஒன்பது பேர் அடங்கிய நிபுணத்துவ குழுவொன்றினையும் அரசாங்கம் நியமித்தது.

கருத்துருவாக்கத் தலைவர்களின் பார்வையில், அரசியலமைப்பின் நோக்கம் மற்றும் உள்ளடக்கம் எனும் இக்கணிப்பீடானது அரசாங்கம் திட்டமிடுகின்ற எதிர்கால அரசியலமைப்பு மாற்றத்தினைக் கருத்தில் கொண்டு நடாத்தப்பட்டது. இக்கணிப்பீட்டின் பிரதானமான நோக்கமானது கருத்துருவாக்கத் தலைவர்களுடைய 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு சார்ந்ததான அறிவு, நடத்தைகள் மற்றும் கருத்துக்களின் இயல்நோக்கு என்பவற்றை மதிப்பீடு செய்வதே ஆகும். 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் செயலாற்றுகை தொடர்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் அளவுசார் மற்றும் பண்புசார் ரீதியிலான மதிப்பீட்டு ஆய்வின் ஒரு அளவுசார் கூறாகவே இக்கணிப்பீடு நடாத்தப்பட்டது. மேற்கொள்ளப்படவிருக்கும் இம்மதிப்பீட்டு ஆய்வானது, ஏற்கனவே, தென்னாபிரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் அரசியலமைப்பின் செயலாற்றுகையினை மதிப்பீடு செய்வதற்கு இன்டர்நெஷனல் IDEA வினால் (International Institute for Democracy and Electoral Assistance) பயன்படுத்தப்பட்ட முறைமையியலை சார்ந்து மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), இன்டர்நெஷனல் IDEA மற்றும் அரசியலமைப்பு சட்டத்திற்கான எடின்பரோ நிலையம் (ECCL) ஆகியவற்றின் இணைபங்களிப்புடன் மேற்கொள்ளப்பட உள்ளது. இலங்கையில் தற்போதுள்ள அரசியலமைப்பு மறுசீரமைப்பு சார்ந்த வாதங்களை மீள்-வடிவமைக்கக்கூடியதும், முறையான, உறுதியான, ஆதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட, பகுப்பாய்வுக்குட்பட்ட மற்றும் பரிந்துரைகளை முன்வைப்பதன் மூலம் ஜனநாயக உடன்பாடு சார்ந்த மேம்பட்ட ஆக்கப்பூர்வமான வாதங்கள் (மற்றும் எதிர் வாதங்கள்) மீதான கட்டமைக்கப்பட்ட கலந்துரையாடல்களுக்கு வழிவகுக்கும் வெளியீடுகளை உருவாக்குவதே பரிந்துரைக்கப்பட்ட இம்மதிப்பீட்டு ஆய்வின் குறிக்கோளாகும். சிவில் சமூகத்தினர், கல்வியாளர்கள் மற்றும் ஊடகம் தொடக்கம் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் அரசியல் சார்ந்த செயற்பாட்டாளர்கள் வரை பல்வேறுபட்டவர்களுக்கு இம்மதிப்பீட்டு ஆய்வின் வெளியீடுகள், பயனுடையதாக அமையும் அதேவேளை, பல்வேறுபட்ட வகையிலும் பயனுடையதாகவும் அமையும்.

1999ஆம் ஆண்டு முதல் இலங்கையில் பரந்த சமூக - அரசியல் விடயங்கள் மீதான கருத்துக் கணிப்புக்களை நடாத்தி வருவதும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் கணிப்பீடு ஆய்வு பிரிவான சோஷல் இன்டிகேட்டர் இக்கணிப்பீட்டை மேற்கொண்டது. இக்கணிப்பீட்டுக் குழுவானது கலாநிதி. பிரதிப் பீரிஸ், சகீனா மொயினுடீன் மற்றும் மா. கிருஷ்ணமூர்த்தி ஆகியவர்களை உள்ளடக்கியதாகும்.

கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து (CPA), கலாநிதி. அசங்க வெலிகல (ECCL), பேராசிரியர் டொம் கிங்பக்ஸ் (சிக்காகோ பல்கலைக்கழகம்) மற்றும் அமென்டா கட்ஸ்-பாரில் (இன்டர்நெஷனல் IDEA) ஆகியோரின் பெறுமதிமிக்க உள்ளீடுகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கு சோஷல் இன்டிகேட்டர் நன்றியைத் தெரிவிக்கிறது. இக்கணிப்பீட்டிற்கான நிதியுதவியை இன்டர்நெஷனல் IDEA வழங்கியது.

# முறைமையியல்

இக்கணிப்பீடானது பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட ஒரு வினாக்கொத்தினை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் 25 மாவட்டங்களிலுள்ள பிரதான இனத்துவ சமூகங்களைச் (சிங்களம், தமிழ், மலையகத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்) சேர்ந்த 400 கருத்துருவாக்கத் தலைவர்களுடன் நேருக்கு நேர் நேர்காணலினை மேற்கொண்டு நடாத்தப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும், தெரிவுசெய்யப்பட்ட இனத்துவ சமூகங்களைச் சேர்ந்த 40 வயதிற்கு மேற்பட்ட, சமூக செயற்பாடுகளில் செயற்திறன்மிக்க வகையில் செயலாற்றுகின்ற மதத் தலைவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். இந்த மாதிரியில் ஐந்தில் நான்கு பங்குக்கு மேற்பட்டவர்கள் (82.2%) ஆண்களாக இருந்தனர்.

வெளிக்கள பணி ஆரம்பிக்கப்பட முன்னர் வினாக்கொத்து மற்றும் வெளிக்கள நுட்பங்கள் தொடர்பில் வெளிக்கள ஆய்வாளர்களுக்கு விரிவான பயிற்சிகள் வழங்கப்பட்டன. 2020ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதி ஆய்வுக்கான வினாக்கொத்து முன் பரீட்சார்த்தம் செய்யப்பட்டது. சிங்கள மற்றும் தமிழ் வெளிக்கள ஆய்வாளர்களுக்கு பிரதான ஆய்வுக்கான பயிற்றுவிப்புகள் 2020 மார்கழி 22-23ஆம் திகதிகளில் மேற்கொள்ளப்பட்டது. இக்கற்கையில் சகல இனத்துவ சமூகங்களையும் சேர்ந்த ஆண் மற்றும் பெண் ஆகிய இருசாராரையும் உள்ளடக்கிய மொத்தம் 64 வெளிக்கள ஆய்வாளர்கள் பங்குபற்றினார்கள். வெளிக்களப் பணியானது 2020 மார்கழி மாதம் 24ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டதுடன், 2021 தை மாதம் 23ஆம் திகதி நிறைவுற்றது. சேகரிக்கப்படும் தரவுகளின் தரத்தினை உறுதிப்படுத்த, தரவு சேகரிப்பின் போதும் அதன் பின்னரும் வெளிக்கள திடீர் விஜயங்கள் மற்றும் மீள் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. தரவானது சமூக விஞ்ஞானங்களுக்கான புள்ளிவிபரத் தொகுப்பினைப் (SPSS) பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டது.

# நிறைவேற்று சாராம்சம்

- தேவையான சில மாற்றங்களுடன் தற்போதைய அரசியலமைப்பானது தொடரவேண்டும் என்பது பெரும்பான்மையான (53%) கருத்துருவாக்கத் தலைவர்களின் பார்வையாகக் காணப்படுகின்றது.

- சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்களின் கருத்தின்படி, பொருளாதார சுபீட்சம் மற்றும் தேசிய பாதுகாப்பு என்பன புதிய அரசியலமைப்பில் கவனம் செலுத்தப்பட வேண்டிய மிகப் பிரதானமான அம்சங்களாகும். ஆனால், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் கருத்துருவாக்கத் தலைவர்களின் கருத்தின்படி, பொருளாதார சுபீட்சம், தேசிய பாதுகாப்பு மற்றும் பன்மைத்துவ சமூகம் போன்ற விடயங்கள் புதிய அரசியலமைப்பில் கவனம் செலுத்தப்பட வேண்டிய மிக முக்கியமான அம்சங்களாகும்.

- நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தொடர்பிலான கருத்துக்கள் வேறுபட்டு தென்படுகின்றன. 42% அது முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்கின்றனர். கிட்டத்தட்ட 31% நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையானது தொடர வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர்.

- ஜனநாயகம் செயற்படும் விதம் தொடர்பில் நம்பிக்கை அற்ற நிலைப்பாட்டினையே பதிலளிப்பவர்கள் கொண்டுள்ளனர். 52% ஜனநாயகம் செயற்படும் விதம் தொடர்பில் தாம் திருப்தியடைவதாகவும், கிட்டத்தட்ட 48% திருப்தியில்லை எனவும் குறிப்பிடுகின்றனர்.

- சமூக அநீதிக்கெதிராக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு அல்லது ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றுவதற்கு சுதந்திரம் உண்டு என்பதனை அனைத்து இனச் சமூகங்களும் குறிப்பிடத்தக்களவு ஏற்றுக்கொள்கின்ற அதேவேளை அதிகமான தமிழ் சமூகத் தலைவர்கள் அவ்வாறு செய்ய எந்தவித சுதந்திரமும் இல்லை என்று குறிப்பிடுகின்றனர்.

- ஒருவரின் மதத்தை மற்றும் அதன் பாரம்பரிய பழக்கவழக்கங்கள்/ சடங்குகளைக் கடைபிடித்தல் தொடர்பிலான சுதந்திரம் பற்றி அவதானிக்கும் போது, அனைத்து இன சமூகங்களையும் சேர்ந்த பெரும்பான்மையான சமூகத் தலைவர்கள் தமக்கு அதற்கான சுதந்திரம் உண்டெனக் குறிப்பிட்டனர். சுவாரஸ்யமான விடயம் என்னவெனில், தமக்கு அதற்கான சுதந்திரம் இல்லை என்பதே முஸ்லிம் சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பெரும்பான்மையான சமூகத் தலைவர்களின் பார்வையாக இருக்கின்றது.

- இலங்கையின் நீதித்துறை சுயாதீனமானதா, இல்லையா என்பது தொடர்பில் பார்க்கையில், 22.3% சமூகத் தலைவர்களின் கருத்துக்களின்படி, இலங்கையின் நீதிமன்றங்கள் மற்றும் நீதிபதிகள் முழுமையாக சுயாதீனமற்ற நிலையில் காணப்படுவதாகத் தெரிவித்தனர். 13% மட்டுமே நீதித்துறை சுயாதீனமானது என்று எண்ணுகின்றனர்.

- இலங்கையின் சட்ட நிறுவனங்களின் நியாயமான நடாத்துகை தொடர்பில் தெரிவிக்கையில், குற்றம் சாட்டப்பட்டவர் சிறுபான்மை இன-மத குழுவாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்கள் நியாயமற்ற முறையில் நடாத்தப்படுவார்கள் என நான்கில் ஒரு பகுதி சமூகத் தலைவர்கள் குறிப்பிடுகின்றனர்.


# 1. தற்போதைய அரசியலமைப்பு

## அறிந்து வைத்திருக்கும் நிலை

### அரசியலமைப்பு தொடர்பாக நிலவி வரும் அறிவு மட்டம்

கருத்துருவாக்கத் தலைவர்களில் 11.1% மட்டுமே அரசியலமைப்பின் உள்ளடக்கம் தொடர்பில் தாம் பெருமளவுக்கு அறிந்திருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். அரசியலமைப்பின் உள்ளடக்கம் தொடர்பில் தாம் ஓரளவு அறிந்திருப்பதாக பெரும்பாலானவர்கள் தெரிவிக்கின்றனர். மற்றவர்களிலும் பார்க்க சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள் அரசியலமைப்பின் உள்ளடக்கம் தொடர்பாக ஓரளவு அதிகம் அறிந்திருப்பதைக் காணமுடிகிறது (வரைபடம் 1).


வரைப்படம் 1. இலங்கை அரசியலமைப்பின் உள்ளடக்கம் தொடர்பில் அறிந்துள்ள அளவு - இன அடிப்படையில்




### அரசியல், பொது விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு என்பன குறித்து மக்கள் எந்த அளவுக்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்?

கேள்விகளுக்கு பதிலளிப்பவர்கள் அரசியல், பொது விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு என்பன தொடர்பாக எந்த அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பதனை மதிப்பிடும் பொருட்டு, பாராளுமன்றத்தில் இருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை என்ன? தற்போதைய பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைக் கொண்டிருக்கும் கட்சி எது? தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் என்ன? மற்றும் மிக அண்மையில் அரசியலமைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தம் என்ன? போன்ற வேறுபட்ட கேள்விகள் அவர்களிடம் கேட்கப்பட்டன. அனைத்து இனத்துவ சமூகங்களையும் சேர்ந்த கணிசமான சதவீதத்தினர் இந்த விடயங்கள் தொடர்பாக நன்கு அறிந்து வைத்திருப்பது தெரியவருகிறது (வரைபடம் 2).

வரைபடம் 2. குறிப்பிடப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதிலை தெரிந்து வைத்திருப்பவர்கள் - இன அடிப்படையில்





## மாற்றத்திற்கான ஆதரவு

### எமக்கு ஒரு புதிய அரசியலமைப்பு தேவையா?

நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்ட கருத்துருவாக்கத் தலைவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் தற்போதைய அரசியலமைப்பு தேவையான ஒரு சில மாற்றங்களுடன் தொடர வேண்டுமெனக் கருதுகின்றனர். அதேவேளையில், 37% ஒரு புதிய அரசியலமைப்பு தேவையென குறிப்பிடுகின்றனர். தமிழ் மற்றும் சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்கள் ஒரு புதிய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை பெருமளவு வலியுறுத்துகின்றனர் (வரைபடம் 3).


வரைபடம் 3. அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் தன்மை - இன அடிப்படையில்




### எமக்கு ஒரு புதிய அரசியலமைப்பு தேவைப்படுவது ஏன்?

ஒரு புதிய அரசியலமைப்பில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்களாக பொருளாதார சுபீட்சம் மற்றும் தேசிய பாதுகாப்பு என்பவை இருப்பதாக சிங்கள சமூக கருத்துருவாக்கத் தலைவர்கள் கூறுகின்றனர். தமிழர், மலையகத் தமிழர் மற்றும் முஸ்லிம் ஆகிய சமூக கருத்துருவாக்கத் தலைவர்கள் பொருளாதார சுபீட்சம் மற்றும் தேசிய பாதுகாப்பு என்பவற்றுடன், பன்மைத்துவ சமூகமொன்றை உறுதிப்படுத்துவதும் மிக முக்கியமானது எனக் குறிப்பிடுகின்றனர். பன்மைத்துவ சமூகமொன்றை உறுதிப்படுத்துவதற்கு புதிய அரசியலமைப்பு தேவைப்படுகின்றது என்ற விடயத்தை 1.8% சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்கள் மட்டுமே தெரிவிக்கின்றனர் (வரைபடம் 4).


வரைபடம் 4. புதிய அரசியலமைப்பொன்றின் நோக்கம் - இன அடிப்படையில்




## சீர்திருத்தம்

ஒரு புதிய அரசியலமைப்பிற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் குறித்த தகவல்களை மக்களுக்கு வெளிப்படுத்திய நிலையில், பதிலளிப்பவர்களில் சுமார் அரைவாசிப் பேர் (48%) இந்தத் திட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் மக்களுடன் வெற்றிகரமாக தொடர்பாடலை ஏற்படுத்தவில்லை எனச் சுட்டிக்காட்டுகின்றனர். அதேவேளையில், அது ஓரளவுக்கு வெற்றிகரமாக செயற்பட்டடுள்ளது. ஆனால், இதிலும் பார்க்க நன்கு செயற்படலாம் என சுமார் 40% குறிப்பிடுகின்றனர் (வரைபடம் 5).

வரைபடம் 5. உத்தேச புதிய அரசியலமைப்பு குறித்து பொதுமக்களுடனான அரசாங்கத்தின் தொடர்பாடல் பற்றிய அபிப்பிராயம் - இன அடிப்படையில்




தொலைக்காட்சி செய்திகள் மற்றும் விவாதங்கள், செய்திப் பத்திரிகைகள், தமது படித்த நண்பர்கள் மற்றும் அயலவர்களுடன் உரையாடுதல் என்பவற்றை புதிய அரசியலமைப்பு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ளும் மூன்று முக்கியமான மூலாதாரங்களாக கருத்துருவாக்கத் தலைவர்கள் குறிப்பிடுகின்றனர் (அட்டவணை 1).

அட்டவணை 1. அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் தொடர்பாக தகவல்களை பெற்றுக் கொள்ளும் மூலாதாரங்கள்

| | தேசிய | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|---|---|
| எனது குடும்பத்தில் உள்ள பெரியவர்களுடன் கதைப்பேன் | 2.2% | 3.6% | 2.0% | 2.0% | 0.0% |
| படித்த/கற்ற எனது நண்பர்கள் மற்றும் அயலவர்களுடன் கதைப்பேன் | 14.4% | 10.8% | 14.1% | 6.0% | 26.1% |
| எனது சிந்தனைகளுக்கு அண்மித்ததான சிந்தனையுடையதாக நான் கருதும் கட்சி தலைவர்களது கருத்துக்களை செவிமடுப்பேன் | 6.4% | 6.0% | 4.0% | 14.0% | 5.7% |
| எனது மதத் தலைவர்கள் குரல்கொடுக்கும் கருத்துக்களை கேட்பேன் | 1.7% | 2.4% | 1.0% | 2.0% | 1.1% |
| தொலைக்காட்சி செய்திகள் மற்றும் விவாதங்களைப் பார்ப்பேன் | 36.6% | 36.5% | 37.4% | 34.0% | 37.5% |
| பத்திரிகைகளை வாசிப்பேன் | 16.6% | 10.8% | 23.2% | 26.0% | 14.8% |
| அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆதாரங்களை வாசிப்பேன் | 9.9% | 16.2% | 6.1% | 6.0% | 4.5% |
| பாராளுமன்ற இணையத்தளத்துக்குள் பார்ப்பேன் | 7.7% | 7.2% | 8.1% | 6.0% | 9.1% |
| அரசியலமைப்பு தொடர்பான தகவல்களைப் பெறும் தேவை இல்லை | 1.0% | 0.6% | 3.0% | 0.0% | 0.0% |
| பதிலளித்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 404 | 167 | 99 | 50 | 88 |

# 2. அரசியல் ஒழுங்கின் இயல்பு

## தலைமைத்துவம்

தேர்தல் முறைமையிலான ஆட்சிமுறைக்கு பதிலளிப்பவர்கள் அதியுயர்ந்த ஆதரவை வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், அனைத்து இனத்துவ சமூகங்கள் மத்தியிலும் பாராளுமன்றம் மற்றும் தேர்தல்கள் என்பன குறித்து கவலைப்படாமல் முடிவுகளை எடுக்கக்கூடிய வலுவான ஒரு தலைவர் இருக்கின்ற நிலைமையை கணிசமான அளவில் ஏற்றுக்கொள்கின்றனர்.

ஆய்வுக்கு பதிலளித்த சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்களில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கினர் சிறுபான்மை சமூகங்களின் அபிப்பிராயத்திற்கு மாறான விதத்தில், இராணுவத்தை முதன்மைபடுத்திய ஒரு தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கின்றனர். அனைத்து இனத்துவ சமூகங்களையும் பொறுத்தவரையில் சமயத் தலைமைத்துவத்திற்கான ஆதரவு மிகக் குறைந்த மட்டத்திலேயே இருந்து வருகின்றது. கால்வாசிப் பங்கு முஸ்லிம் கருத்துருவாக்கத் தலைவர்கள் அதற்கு ஆதரவு தெரிவிப்பதுடன், சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்கள் மூன்றில் ஒரு பங்கினர் அதற்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் (அட்டவணை 2).


அட்டவணை 2. தலைமைத்துவ வகைகள் - இன அடிப்படையில்

| | உடன்படுகிறேன் | | | | |
|---|---|---|---|---|---|
| | தேசிய | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
| பாராளுமன்றம் மற்றும் தேர்தல்கள் என்பன குறித்து கவலைப்படாமல் முடிவுகளை எடுக்கக்கூடிய வலுவான ஒரு தலைவர் இருந்து வருதல் | 59.1% | 58.6% | 56.1% | 56.3% | 64.8% |
| பாராளுமன்றம் மற்றும் தேர்தல்கள் என்பன குறித்து கவலைப்படாமல் நாட்டுக்கு மிகச் சிறந்தது எது என அவர் நம்புகிறாரோ அதன் பிரகாரம் முடிவுகளை எடுக்கக்கூடிய ஒரு நிபுணரை கொண்டிருத்தல் | 65.2% | 58.1% | 69.7% | 79.2% | 65.5% |
| நாட்டை ஆட்சி செய்வதற்கு இராணுவம் முன்வர வேண்டும் | 33.1% | 62.4% | 16.3% | 10.2% | 9.2% |
| சுதந்திரமான, நியாயமான தேர்தல் ஒன்றில் மக்களால் தெரிவு செய்யப்படுபவர்கள் மூலம் நாடு ஆட்சி செய்யப்பட வேண்டும் | 96.8% | 93.9% | 99.0% | 100.0% | 97.7% |
| நாடு தொடர்பான அனைத்து முக்கியமான முடிவுகளும் அரசியல்வாதிகளிலும் பார்க்க சமயத் தலைவர்களினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் | 24.9% | 34.0% | 18.4% | 6.3% | 25.6% |

## ஜனநாயகம்


அனைத்து இனத்துவ சமூகங்களையும் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்களில் ஆகக் கூடிய விகிதாசாரத்தினர் வேறு எந்த ஆட்சி முறையிலும் பார்க்க தாம் ஜனநாயகத்தையே விரும்புவதாக தெரிவிக்கின்றனர். இந்த உணர்வு சிறுபான்மை சமூகங்களுக்கு மத்தியில் மிகவும் வலுவானதாக இருந்து வருகின்றது (வரைபடம் 6).

வரைபடம் 6. ஜனநாயகத்திற்கான ஆதரவு - இன அடிப்படையில்




நாட்டில் ஜனநாயகம் எவ்வாறு செயற்பட்டு வருகின்றது என்பது குறித்து பதிலளிப்பவர்கள் மத்தியில் ஓரளவு தெளிவற்ற நிலை காணப்படுகின்றது. தாம் இது தொடர்பில் திருப்தி அடைவதாக சுமார் 52% தெரிவிக்கும் அதே வேளையில், சுமார் 48% இது குறித்து அதிருப்தி அடைவதாக தெரிவிக்கின்றனர். மலையகத் தமிழர்கள் (62%), அதனையடுத்து தமிழர்கள் (60%) மற்றும் சிங்களவர் (54%) ஆகியோரே பெருமளவு திருப்தி அடைபவர்களாக உள்ளனர். பெருமளவுக்கு அதிருப்தி அடைவதாக தெரிவிப்பவர்கள் முஸ்லிம் சமூகத்தினர் (67%) ஆவர். (வரைபடம் 7).


வரைபடம் 7. இலங்கையில் ஜனநாயகம் செயற்பட்டுவரும் விதம் குறித்த திருப்தி - இன அடிப்படையில்




## நாட்டின் ஆளுகையில் செல்வாக்கு செலுத்தும் வாய்ப்பு

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாடு எவ்வாறு ஆளப்பட்டு வருகின்றது என்ற விடயத்தில் ஓரளவுக்கு செல்வாக்குச் செலுத்தக் கூடிய வாய்ப்பு தமக்கு இருந்து வருகின்றது என கருத்துருவாக்கத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் (63.6%) கூறுகின்ற போதிலும், தமக்கு அது தொடர்பாக எத்தகைய செல்வாக்கும் செலுத்தக்கூடிய நிலை காணப்படவில்லையென் மூன்றில் ஒரு பங்கினர் தெரிவிக்கின்றனர். மலையகத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்களே (42.0%) இந்த விடயத்தில் தமக்கு எத்தகைய செல்வாக்கும் செலுத்த முடியாதென பதிலளிக்கின்றனர் (வரைபடம் 8).


வரைபடம் 8. நாட்டின் ஆளுகையில் செல்வாக்கு செலுத்துவதற்கான வாய்ப்பு - இன அடிப்படையில்




## தேர்தல்கள்

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தேர்தல்கள் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் நடாத்தப்பட்டு வருகின்றன என கருத்துருவாக்கத் தலைவர்களில் கிட்டத்தட்ட 45% தெரிவிக்கின்றனர். அதேவேளையில், தேர்தல்கள் அநேகமாக சுதந்திரமானதும் நியாயமானதுமான நடாத்தப்படுவதில்லை என சுமார் 16% கூறுகின்றனர் (வரைபடம் 9).


வரைபடம் 9. தேர்தல்கள் எந்தளவு தூரம் சுதந்திரமானதும் நியாயமானதுமான முறையில் நடாத்தப்படுகின்றன - இன அடிப்படையில்




## அரசியலமைப்புக்கான விளக்கமளிக்கும் பொறுப்பு

அரசியலமைப்பு ரீதியான ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அதற்கு விளக்கம் அளிப்பதற்கான பொறுப்பினை உச்ச நீதிமன்றமே கொண்டுள்ளது என சுமார் மூன்றில் இரண்டு பங்கு (64.6%) கருத்துருவாக்கத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளையில், அது பாராளுமன்றத்தின் பொறுப்பு என சுமார் 22% குறிப்பிடுகின்றனர். அவ்வாறு செய்வது ஜனாதிபதியின் பொறுப்பு என 7.4% கூறுகிறார்கள் (வரைபடம் 10).

வரைபடம் 10. ஓர் அரசியலமைப்பு நெருக்கடியின் போது, அரசியலமைப்புக்கு விளக்கமளிக்கும் பொறுப்பினைக் கொண்டிருப்பது - இன அடிப்படையில்




# 3. ஜனாதிபதி பதவி

## அதிகாரங்கள்

நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடர்பான வேறுபட்ட அபிப்பிராயங்கள் காணப்படுகின்றன. தேசிய ரீதியில் சுமார் 42% அது முற்றாக ஒழிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை கொண்டிருக்கின்றனர். அதேவேளையில், ஜனாதிபதியிடம் குறைந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டு நிறைவேற்று அதிகார முறை தொடரவேண்டுமென சுமார் 31% நம்புகின்றனர். நிறைவேற்று ஜனாதிபதி முறை மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமென 6% மட்டுமே குறிப்பிடுகின்றனர். எத்தகைய மாற்றங்களும் மேற்கொள்ளப்படாமல் தொடரவேண்டும் என்ற கருத்துக்கு 18% ஆதரவளிக்கின்றனர்.

ஜனாதிபதி ஆட்சி முறை குறித்த அபிப்பிராயங்கள் இனத்துவ குழுக்களின் அடிப்படையில் கணிசமான அளவில் வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஒருவகையான பகுப்பாய்வின் அடிப்படையில் சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்களில் கணிசமான பெரும்பான்மையினர் நிறைவேற்று ஜனாதிபதி முறை அவசியமான ஒரு சில மாற்றங்களுடன் தொடர வேண்டும் அல்லது மேலும் பலப்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தைக் கொண்டுள்ளனர். எனினும், இன்னொரு வகையான பகுப்பாய்வின் அடிப்படையில் சிங்களவர்களில் தெளிவான பெரும்பான்மையினர் தற்போதைய முறை குறித்து அதிருப்தி அடைந்துள்ளனர். நிறைவேற்று ஜனாதிபதி முறை முழுமையாக நீக்கப்பட வேண்டுமென 18.6% தெரிவிப்பதுடன், 43.1% ஜனாதிபதியிடம் குறைந்த அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட்டு நிறைவேற்று அதிகார முறை தொடரவேண்டும் என்ற கருத்தை முன்வைக்கின்றார்கள். தமிழர் மற்றும் மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்யும் கருத்துருவாக்கத் தலைவர்கள் மட்டுமே நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான விருப்பத்தை தெளிவாக வெளிப்படுத்துகின்றனர். (வரைபடம் 11).

வரைபடம் 11. நிறைவேற்று ஜனாதிபதி முறை - இன அடிப்படையில்



பிரதமரை அல்லது அமைச்சரவையை கலந்தாலோசிக்காது, அரச சேவைகள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் முக்கிய பதவிகளுக்கு ஆட்களை நியமிக்க மற்றும் பதவிநீக்கம் செய்வதற்கான முழுமையான அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருக்கக்கூடாது என கருத்துருவாக்கத் தலைவர்களில் அதிகூடிய பெரும்பான்மையினர் (72.2%) குறிப்பிடுகின்றனர்.


ஜனாதிபதி அவர் விரும்பும் எத்தனை எண்ணிக்கையான அமைச்சுக்களையும் தனக்குக் கீழ் எடுக்க முடியும் என்ற நிலை இருக்கக்கூடாது என பதிலளிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் (76.2%) கூறுகின்றனர். ஜனாதிபதி அவர் விரும்பும் எந்தவொரு அமைச்சினையும் தனக்குக் கீழ் எடுக்க முடியும் என்ற நிலை இருக்கக்கூடாது என பெரும்பாலானவர்கள் (58.7%) தெரிவிக்கின்றனர். பதிலளிப்பவர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் மேற்பட்டவர்கள் (68.6%), எந்நேரம் வேண்டுமானாலும் பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிக்க மற்றும் பதவிநீக்கம் செய்ய முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் என்ற நிலையை மறுக்கின்றனர். எவ்வாறிருப்பினும், 43% சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்கள், எந்நேரம் வேண்டுமானாலும் பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிக்க மற்றும் பதவிநீக்கம் செய்ய முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்றுக்கொள்கின்றனர்.

கருத்துருவாக்கத் தலைவர்களில் சுமார் நான்கில் மூன்று பங்கினர் அரசியலமைப்பு ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுக்க வேண்டுமென கூறுகின்றனர். இந்தக் கருத்து சிறுபான்மைச் சமூகத்தினர் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றது (வரைபடம் 12).

அட்டவணை 3. ஜனாதிபதிக்கு குறிப்பிட்ட அதிகாரங்களை வழங்குவது தொடர்பான கருத்து - இன அடிப்படையில்

| | | தேசிய | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|---|---|---|
| பிரதமரை அல்லது அமைச்சரவையை கலந்தாலோசிக்காது, அரச சேவைகள் மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்களின் முக்கிய பதவிகளுக்கு ஆட்களை நியமிக்க மற்றும் பதவிநீக்கம் செய்ய முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன் | 23.3% | 29.9% | 16.2% | 14.0% | 23.9% |
| | மறுக்கிறேன் | 72.0% | 64.1% | 78.8% | 80.0% | 75.0% |
| | தெரியாது | 4.7% | 6.0% | 5.1% | 6.0% | 1.1% |
| ஜனாதிபதி அவர் விரும்பும் எந்தவொரு அமைச்சினையும் தனக்குக் கீழ் எடுப்பதற்கு முடியும் | ஏற்றுக்கொள்கிறேன் | 38.9% | 46.1% | 35.4% | 26.0% | 36.4% |
| | மறுக்கிறேன் | 58.7% | 50.9% | 62.6% | 72.0% | 61.4% |
| | தெரியாது | 2.5% | 3.0% | 2.0% | 2.0% | 2.3% |
| ஜனாதிபதி அவர் விரும்பும் எத்தனை எண்ணிக்கையான அமைச்சுக்களையும் தனக்குக் கீழ் எடுப்பதற்கு முடியும் | ஏற்றுக்கொள்கிறேன் | 19.8% | 29.3% | 14.1% | 12.0% | 12.5% |
| | மறுக்கிறேன் | 76.2% | 65.9% | 82.8% | 84.0% | 84.1% |
| | தெரியாது | 4.0% | 4.8% | 3.0% | 4.0% | 3.4% |
| எந்நேரம் வேண்டுமானாலும் பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சர்களை நியமிக்க மற்றும் பதவிநீக்கம் செய்ய முழு அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்க வேண்டும் | ஏற்றுக்கொள்கிறேன் | 28.0% | 43.1% | 16.2% | 14.0% | 20.5% |
| | மறுக்கிறேன் | 68.6% | 51.5% | 81.8% | 82.0% | 78.4% |
| | தெரியாது | 3.5% | 5.4% | 2.0% | 4.0% | 1.1% |
| பதிலளித்தவர்களின் மொத்த எண்ணிக்கை | | 404 | 167 | 99 | 50 | 88 |


வரைபடம் 12. அரசியலமைப்பு ஜனாதிபதியின் அதிகாரங்களை வரையறுக்க வேண்டுமா என்பது குறித்த கருத்துக்கள் - இன அடிப்படையில்




## பதவிக்காலம்

ஜனாதிபதியின் பதவிக்காலம் இரு தடவைகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்துக்கு தெளிவான விருப்பத்தை பதிலளிப்பவர்கள் வெளிப்படுத்துகின்றனர். இந்தத் தெரிவு தொடர்பாக இன அடிப்படையில் எத்தகைய கணிசமான வேறுபாடுகளும் காணப்படவில்லை (வரைபடம் 13).

வரைபடம் 13. ஜனாதிபதியின் பதவிக்கால வரையறை தொடர்பான கருத்து - இன அடிப்படையில்





## சட்டபூர்வத் தன்மை

ஜனாதிபதி எப்பொழுதும் ஒரு சிங்கள பௌத்தராக இருக்கவேண்டும் என சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்களில் கணிசமான அளவு பெரும்பான்மையினர் (73.1%) குறிப்பிடுகின்றனர். சிறுபான்மைச் சமூகங்களில் இதிலும் பார்க்க அதிக சதவீதத்தினர், தெரிவு செய்யப்படுவதற்கான ஒரு தகுதியாக அவரது இனம் மற்றும் மதம் இருக்கக் கூடாது எனக் கூறுகிறார்கள் (வரைபடம் 14).


ஜனாதிபதி பாராளுமன்ற முன் அனுபவத்தைக் கொண்டவராக இருக்கவேண்டுமென கருத்துருவாக்கத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் குறிப்பிடுகின்ற போதிலும் பதிலளிப்பவர்களில் கால்வாசிக்கும் மேற்பட்டவர்கள் அதனை ஒரு முன்நிபந்தனையாக கருதவில்லை. அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த கணிசமான அளவு பெரும்பான்மையினர், ஜனாதிபதி அனைத்து இனத்துவ குழுக்களுக்கு மத்தியிலும்

நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கின்றனர் (வரைபடம் 15 மற்றும் 16).


வரைபடம் 14. ஜனாதிபதி சிங்கள பௌத்தராக இருத்தல் எனும் முன்நிபந்தனை - இன அடிப்படையில்




வரைபடம் 15. ஜனாதிபதியின் முன்னைய அரசியல் அனுபவம் தொடர்பான எதிர்பார்ப்பு - இன அடிப்படையில்




வரைபடம் 16. நாட்டின் இனத்துவ மற்றும் சமயக் குழுக்களுக்கு மத்தியில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவது ஜனாதிபதியின் பொறுப்பு - இன அடிப்படையில்



## தண்டனை விலக்கீட்டு உரிமை (Immunity)

ஜனாதிபதி சிவில் அல்லது குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் விளைவுகளுக்கும் ஜனாதிபதி முகம் கொடுக்கத் தேவை இல்லை என கருத்துருவாக்கத் தலைவர்களில் கணிசமான அளவு பெரும்பான்மையினர் (80.9%) குறிப்பிடுகின்றனர். ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ அதிகாரத்தின் அடிப்படையில் செய்த அல்லது செய்யாது தவிர்த்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எதிராக பிரஜைகள் தங்களது உரிமைகளைப் பாதுகாக்க அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்ய முடியுமாக இருக்கவேண்டும் என அதிபெரும்பான்மையினர் (86.9%) கூறுகின்றனர் (அட்டவணை 4).

அட்டவணை 4. ஜனாதிபதியின் விலக்கீட்டு உரிமை - இன அடிப்படையில்


| | | தேசிய | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|---|---|---|
| எந்தவிதமான சிவில் மற்றும் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளின் விளைவுகளுக்கும் ஜனாதிபதி முகம் கொடுக்கத் தேவை இல்லை | ஏற்றுக்கொள்கிறேன் | 14.9% | 9.6% | 14.1% | 12.0% | 27.3% |
| | மறுக்கிறேன் | 80.9% | 85.0% | 81.8% | 82.0% | 71.6% |
| | தெரியாது | 4.2% | 5.4% | 4.0% | 6.0% | 1.1% |
| ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ அதிகாரத்தின் அடிப்படையில் செய்த அல்லது செய்யாது தவிர்த்த விடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு எதிராக பிரஜைகள் தமது உரிமைகளை பாதுகாக்க, அடிப்படை உரிமை மனுக்களைத் தாக்கல் செய்ய முடியும் | ஏற்றுக்கொள்கிறேன் | 86.9% | 83.8% | 87.9% | 90.0% | 89.8% |
| | மறுக்கிறேன் | 8.9% | 9.0% | 10.1% | 8.0% | 8.0% |
| | தெரியாது | 4.2% | 7.2% | 2.0% | 2.0% | 2.3% |
| பதிலளித்தவர்கள் மொத்த எண்ணிக்கை | | 404 | 167 | 99 | 50 | 88 |

# 4. பொருளாதாரத்தின் இயல்பு

## பொருளாதார கொள்கை தொடர்பான கருத்துக்கள்

நாட்டின் பொருளாதாரத்தை வலுவூட்ட, தனிப்பட்ட வருவாயை கட்டுப்படுத்துவதில் அரசாங்கம் ஈடுபடக்கூடாது என கருத்துருவாக்கத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் (சுமார் 58%) கூறுகின்றனர். எவ்வாறிருப்பினும், பிரஜைகளுக்கிடையிலான வருமான இடைவெளியைக் குறைப்பதற்கு, அரசாங்கமானது வருவாயைக் கட்டுப்படுத்த சட்டங்களை விதிக்க வேண்டும் என்ற கருத்தினை சுமார் 23% கொண்டிருக்கின்றனர். முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்கள் (70.5%) பொருளாதாரத்தை பலப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் தனிநபர் வருமானங்களை கட்டுப்படுத்துவதில் ஈடுபடக்கூடாது என்ற கருத்தில் வலுவாக உள்ளனர். (வரைபடம் 17).


வரைபடம் 17. தனிநபர் வருமானத்தை கட்டுப்படுத்துவது குறித்த கருத்துக்கள் - இன அடிப்படையில்




## அரச உடமை - தனியார் உடமை

அனைத்து இனத்துவ சமூகங்களையும் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்களில் ஓரளவு அதிக சதவீதத்தினர் தனியார் தொழில்முயற்சியாளர்களிலும் பார்க்க அரச உடமைக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் (42.1% எதிர் 31.9%). ஒரு நிறுவனம் தனியார் தொழில் முயற்சியாளர்களாலேயே சிறந்த முறையில் நடாத்தப்படும் என்ற கருத்தை முஸ்லிம் கருத்துருவாக்கத் தலைவர்களில் அதிகளவானவர்கள் ஆதரவளிப்பவர்களாக இருக்கின்றனர் (வரைபடம் 18).


வரைபடம் 18. தொழில்முயற்சியாளர்களின் உரிமம் தொடர்பான கருத்துக்கள் - இன அடிப்படையில்




## பொருளாதார இறைமை

அனைத்துச் சமூகங்களிலிருந்தும் மதிப்பீட்டாய்வுக்கு உட்படுத்தப்பட்ட கருத்துருவாக்கத் தலைவர்களில் கிட்டத்தட்ட அரைவாசிப் பங்கினர் (44.6%) அரசாங்கம், வெளிநாட்டு கம்பனிகளுக்கு எமது நாட்டில் முதலீடு செய்வதற்கு அனுமதி வழங்க வேண்டும், வியாபாரம் அதிகரிக்கும் போது, அது அனைவருக்கும் பயனளிக்கும் என்று கூறுகின்றனர். தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமானவர்கள் (57.6%) வெளிநாட்டுக் கம்பனிகள் நாட்டில் முதலீட்டை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அனுமதியளிக்க வேண்டுமென்று குறிப்பிடுகின்றனர். அதேவேளையில், மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்கள் (50%) அரசாங்கம் வெளிநாட்டு முதலீட்டுக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்ற கருத்தைக் கொண்டிருக்கின்றனர் (வரைபடம் 19).

வரைபடம் 19. வெளிநாட்டு முதலீடு தொடர்பான கருத்துக்கள் - இன அடிப்படையில




# 5. மனித உரிமைகள்

## சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்

நாட்டினது நலன் கருதி செயற்படாதது என அரசாங்கம் நம்பும் எந்தவொரு அமைப்பிலும் மக்கள் இணைவதை தடுத்தல் வேண்டும் என கருத்துருவாக்கத் தலைவர்களில் சுமார் அரைவாசிப் பங்கினர் கூறுகின்றனர். அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதோ மறுக்கிறதோ என்பதை பொருட்படுத்தாமல் மக்கள் எந்தவொரு அமைப்பிலும் இணையக்கூடியதாக இருத்தல் வேண்டும் என குறிப்பிட்டவர்களில் அதிகமானவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் (வரைபடம் 20).

வரைபடம் 20. அமைப்புக்களில் இணைந்து கொள்வதற்கான சுதந்திரம் குறித்த மதிப்பீடு - இன அடிப்படையில்




நீங்கள் எங்கிருக்கின்றீர்கள் மற்றும் யாருடன் இருக்கின்றீர்கள் என்பதைப் பொருட்படுத்தாது உங்களது அரசியல் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரத்தை தாம் கொண்டிருப்பதாக கருத்துருவாக்கத் தலைவர்களில் பெரும்பான்மையினர் (80.9%) தெரிவிக்கின்றனர். அவ்வாறு செய்வதற்கான சுதந்திரம் எவ்விதத்திலும் தமக்கில்லை எனக் கூறுபவர்களில் அதிகமானவர்கள் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்களாக இருக்கின்றனர்.


அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்தவர்களில் கணிசமான எண்ணிக்கையினர் சமூக அநீதிக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு அல்லது ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்பதற்கு தமக்கு சுதந்திரம் இருப்பதாகத் தெரிவிக்கும் அதேவேளையில், தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பெரும்பாலான கருத்துருவாக்கத் தலைவர்கள் அவ்வாறு செய்வதற்கான சுதந்திரம் தமக்கு எவ்விதத்திலும் இல்லை எனக் கூறுகின்றனர். அனைத்து இனத்துவ சமூகங்களையும் சேர்ந்த பெரும்பாலான கருத்துருவாக்கத் தலைவர்கள் தமது பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மற்றும் சடங்குகள் என்பவற்றை கடைபிடிப்பதற்கான சுதந்திரம் இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர். அவ்வாறு செய்வதற்கான சுதந்திரம் தமக்கு இல்லையென பதிலளிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் (43.2%) (அட்டவணை 5).

அட்டவணை 5. கருத்து வெளியிடுதல்/ பங்கேற்றல் தொடர்பான சுதந்திரத்தின் தற்போதைய மட்டம் குறித்த மதிப்பீடு - இன அடிப்படையில்

| | | தேசிய | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
|---|---|---|---|---|---|---|
| நீங்கள் எங்கிருக்கின்றீர்கள் மற்றும் யாருடன் இருக்கின்றீர்கள் என்பது பொருட்படுத்தாது உங்களது அரசியல் தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு | முழுமையான சுதந்திரம் உண்டு | 27.2% | 35.3% | 11.1% | 10.0% | 39.8% |
| | ஓரளவு சுதந்திரம் உண்டு | 53.7% | 51.5% | 57.6% | 66.0% | 46.6% |
| | எந்தவித சுதந்திரமும் இல்லை | 17.8% | 11.4% | 31.3% | 22.0% | 12.5% |
| | தெரியாது | 1.2% | 1.8% | 0.0% | 2.0% | 1.1% |
| சமூக அநீதிக்கெதிரான (அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவு, பஸ் கட்டண அதிகரிப்பு) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள | முழுமையான சுதந்திரம் உண்டு | 26.7% | 32.9% | 21.2% | 12.0% | 29.5% |
| | ஓரளவு சுதந்திரம் உண்டு | 55.4% | 55.1% | 50.5% | 72.0% | 52.3% |
| | எந்தவித சுதந்திரமும் இல்லை | 15.3% | 8.4% | 28.3% | 16.0% | 13.6% |
| | தெரியாது | 2.5% | 3.6% | 0.0% | 0.0% | 4.5% |
| உங்களது மதத்தை மற்றும் அதன் பாரம்பரிய பழக்கவழக்கங்கள்/ சடங்குகளைக் கடைபிடிக்க | முழுமையான சுதந்திரம் உண்டு | 47.5% | 75.4% | 32.3% | 50.0% | 10.2% |
| | ஓரளவு சுதந்திரம் உண்டு | 36.1% | 20.4% | 51.5% | 44.0% | 44.3% |
| | எந்தவித சுதந்திரமும் இல்லை | 15.3% | 3.0% | 16.2% | 6.0% | 43.2% |
| | தெரியாது | 1.0% | 1.2% | 0.0% | 0.0% | 2.3% |
| பதிலளித்தவர்களின் மொத்த எண்ணிக்கை | | 404 | 167 | 99 | 50 | 88 |

குறிப்பிட்டவொரு பிரதேசத்தில் வசித்துவரும் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளாத போதிலும், சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென கருத்துருவாக்கத் தலைவர்களில் நான்கில் மூன்று பங்குக்கு மேற்பட்டவர்கள் (86.4%) தெரிவிக்கின்றனர். கணிசமான அளவிலான சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பதிலளிப்பவர்கள் இந்தக் கூற்றுடன் உடன்படுகிறார்கள் (93.9% - 98.9%) (வரைபடம் 21).

வரைபடம் 21. பிரதேசத்தின் பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளாத போதிலும் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் - இன அடிப்படையில்




மாகாண சபைகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டுமென கருத்துருவாக்கத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் (கிட்டத்தட்ட 52%) கூறுகின்றனர். இந்தக் கருத்து அதிகமாக தமிழ் (85.9%) மற்றும் முஸ்லிம் (72.7%) சமூகங்களைச் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்களினால் தெரிவிக்கப்படுகின்றது. சிங்கள கருத்துருவாக்கத் தலைவர்கள் பெருமளவு இந்தக் கருத்துக்கு எதிரான கருத்துடையவர்களாக இருக்கின்றனர் (52.%) (அட்டவணை 6).

அட்டவணை 6. அதிகாரப்பகிர்வு - இனத்துவ அடிப்படையில்

| | தேசிய | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம |
|---|---|---|---|---|---|
| மாகாண சபைகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் | 51.7% | 15.6% | 85.9% | 68.0% | 72.7% |
| மாகாண சபைகளின் அதிகாரங்கள் அதிகரிக்கப்படக் கூடாது | 28.0% | 52.7% | 4.0% | 16.0% | 14.8% |
| இரண்டும் இல்லை | 12.6% | 21.6% | 5.1% | 6.0% | 8.0% |
| பதிலளித்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 404 | 167 | 99 | 50 | 88 |

அனைத்து கருத்துருவாக்கத் தலைவர்களிலும் பெரும்பாலானவர்கள் (72.5%) ஒவ்வொரு இனக் குழுவுக்கும் அவர்களது மக்கள் தொகையினது விகிதாசார அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு குறித்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான உரிமை இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றனர்.

தமிழ் (63.6%) மற்றும் முஸ்லிம் (53.4%) சமூகங்களைச் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் தமது இனத்துவத்தின் அல்லது சமயத்தின் விகிதாசாரத்தை பிரதிநிதித்துவம் செய்யும் விதத்தில் இருக்கவேண்டியது முக்கியம் என்று குறிப்பிடுகின்றனர்.

அனைத்து இனத்துவ சமூகங்களையும் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்களில் பெரும்பாலானர்கள் (60.1%) இலங்கையை போன்றதொரு நாட்டிற்கு இன அல்லது மத அடிப்படையிலான அரசியல் கட்சிகள் இருப்பது சிக்கலானது எனத் தெரிவிக்கின்றனர் (அட்டவணை 7).


அட்டவணை 7. அரசியல் பிரதிநிதித்துவம் - இனத்துவ அடிப்படையில்

| | ஏற்றுக்கொள்கிறேன் | | | | |
|---|---|---|---|---|---|
| | தேசிய | சிங்களம் | தமிழ் | மலையகத் தமிழ் | முஸ்லிம் |
| ஒவ்வொரு இனக் குழுவுக்கும் அவர்களது மக்கள் தொகையினது விகிதாசார அடிப்படையில் பாராளுமன்றத்திற்கு குறித்த எண்ணிக்கையிலான உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான உரிமை இருத்தல் வேண்டும் | 72.5% | 55.7% | 89.9% | 78.0% | 81.8% |
| மக்கள் பிரதிநிதிகள் எனது இனம்/ மதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது எனக்கு முக்கியம் (குறிப்பு- அனைத்து தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்களும் உள்ளடங்குகின்றனர் - மாநகர சபை/ நகர சபை/ பிரதேச சபை/ பாராளுமன்றம்) | 50.2% | 46.1% | 63.6% | 32.0% | 53.4% |
| இலங்கையைப் போன்றதொரு நாட்டிற்கு இனம்/ மதம் அடிப்படையிலான அரசியல் கட்சிகள் இருப்பது சிக்கலானது என நான் நினைக்கின்றேன் | 60.1% | 75.4% | 53.5% | 50.0% | 44.3% |
| பதிலளித்தவர்களின் மொத்த எண்ணிக்கை | 404 | 167 | 99 | 50 | 88 |

## சமூக - பொருளாதார உரித்துக்கள்


தொழில் மற்றும்/அல்லது பொருளாதார நடவடிக்கைகளை தம்மால் இலகுவில் அணுகக்கூடியதாக உள்ளது என பெரும்பாலான கருத்துருவாக்கத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். மலையகத் தமிழர் (44%) மற்றும் முஸ்லிம் (40.9%) சமூகங்களைச் சேர்ந்த பதிலளிப்பவர்கள் இதற்கு எதிரான கருத்தைக் கொண்டிருக்கின்றனர் (வரைபடம் 22).

வரைபடம் 22. தொழில் மற்றும்/அல்லது பொருளாதார நடவடிக்கைகளை அணுகல் - இன அடிப்படையில்





சுகாதார சேவைகளை அணுகுவது எளிதாக இருப்பதாக கருத்துருவாக்கத் தலைவர்களில் அதிக பெரும்பான்மையினர் (91.6%) தெரிவிக்கின்றனர். 8.2% மட்டுமே அவ்வாறு இல்லையென கூறுகின்றனர். மலையகத் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பதிலளிப்பவர்கள் (12%) சுகாதார சேவைகளை அணுகுவது அவ்வளவு எளிதானதாக இல்லையென கூறுகின்றனர் (வரைபடம் 23).

வரைபடம் 23. சுகாதார சேவைகளை அணுகல் - இன அடிப்படையில்




கல்விச் சேவைகளை அணுகுவது எளிதானதாக இருக்கிறது என அதி பெரும்பாலானவர்கள் (92.4%) தெரிவிக்கின்றனர். மலையகத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கல்வியை அணுகுவதில் பெருமளவு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாக குறிப்பிடுகின்றனர் (10%) (வரைபடம் 24).

வரைபடம் 24. கல்விச் சேவைகளை அணுகல் - இன அடிப்படையில்



# 6. நீதித்துறை தொடர்பாக


நீதித்துறை, சட்டம் மற்றும் ஏனைய நிறுவனங்கள் என்பவற்றின் பொதுவான செயல்பாடு மற்றும் சுயாதீனம் என்பன குறித்து கருத்துருவாக்கத் தலைவர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் குறித்து இந்த ஆய்வில் மதிப்பீடு செய்யப்பட்டது.

## சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணல்

நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன பேணப்பட்டு வரும் விதம் குறித்து கருத்துருவாக்கத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் (55%) தாம் அதிருப்தி அடைவதாகத் தெரிவிக்கின்றனர். அதேவேளையில், சுமார் 14% இந்த விடயம் தொடர்பாக தாம் திருப்தி அடைவதாகத் தெரிவிக்கின்றனர். பதிலளிப்பவர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் (30.2%) சட்டம் மற்றும் ஒழுங்கு பேணப்படுதல் தொடர்பாக திருப்தியோ அல்லது அதிருப்தியோ அடையவில்லையென தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம் கருத்துருவாக்கத் தலைவர்கள் (72.7%) இந்த விடயம் தொடர்பில் அதிகமாக அதிருப்தியடைகின்றனர். அதனை அடுத்து மலையகத் தமிழர்கள் (54%), சிங்களவர்கள் (50%) மற்றும் தமிழர்கள் (47.5%) அதிருப்தியடைகின்றனர். சிங்கள சமூகத்தைச் சேர்ந்த பதிலளிப்பவர்கள் (17.4%) இந்த விடயம் தொடர்பாக பெருமளவு திருப்தியடைபவர்களாகக் காணப்படுகின்றனர் (வரைபடம் 25).


வரைபடம் 25. சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான திருப்தி - இன அடிப்படையில்




## சுயாதீனம்

இலங்கையின் நீதிமன்றங்களும், நீதிபதிகளும் முழுமையாகவே சுயாதீனமாகக் காணப்படுவதில்லை என ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட கருத்துருவாக்கத் தலைவர்களில் சுமார் கால்வாசிப் பங்கினர் (22.3%) தெரிவிக்கின்றனர். 13% மட்டுமே நீதித்துறை முழுமையாக சுயாதீனமாக காணப்படுகிறது எனக் குறிப்பிடுகின்றனர். நான்கு இனத்துவ சமூகங்களையும் சேர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் நாட்டின் நீதிமன்றங்களும், நீதிபதிகளும் ஓரளவுக்கு சுயாதீனமாக இருப்பதாகத் தெரிவிக்கின்றனர் (வரைபடம் 26).


வரைபடம் 26. நீதித் துறையின் சுயாதீனம் - இன அடிப்படையில்




## சட்ட நடைமுறை


இலங்கை நீதித்துறை நிறுவனங்களினால் தாங்கள் இன அல்லது மத பாகுபாடு இன்றி நியாயமாக நடத்தப்படுவார்களா எனக் கேட்கப்பட்ட பொழுது, சுமார் அரைவாசிப் பங்கினர் (47.3%) தாம் ஓரளவு நியாயமாக நடத்தப்படுவோம் எனத் தெரிவிக்கின்றனர். இனம் அல்லது மதத்தின் அடிப்படையில் தாங்கள் எவ்விதத்திலும் நீதித்துறையினால் சுயாதீனமாக நடத்தப்படப்போவதில்லை எனக் கருத்துருவாக்கத் தலைவர்களில் நான்கில் ஒரு பங்கினர் குறிப்பிடுகின்றனர் (வரைபடம் 27).

வரைபடம் 27. இன அல்லது மத பாகுபாடு இன்றி நியாயமாக நடத்தப்படுதல் - இன அடிப்படையில்





ஆளும் கட்சியைச் சேர்ந்த ஒருவர் மீது குற்றம்சாட்டப்பட்டிருப்பின் அந்நபர் நியாயமாக நடாத்தப்படுவார் என பதிலளிப்பவர்களில் பெரும்பான்மையினர் (59.4%) கூறுகின்றனர். ஆனால், அவர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவராக இருப்பின் நியாயமாக நடத்தப்படுவார் என்று கூறுபவர்களின் சதவீதம் 30.7% ஆக குறைந்துள்ளதுடன், பொருளாதார ரீதியில் பின்தங்கிய பின்னணியைக் கொண்ட ஒரு நபர் எனின் நியாயமாக நடாத்தப்படுவார் என 27.2% மட்டுமே குறிப்பிடுகின்றனர். அரைவாசிக்கும் சற்று குறைவான (49.3%) கருத்துருவாக்கத் தலைவர்கள் பெரும்பான்மை இனத்துவ சமூகத்தைச் சேர்ந்த நபரெனின் நியாயமாக நடத்தப்படுவார் என நம்புகின்றனர். இதனோடு, சிறுபான்மை இனத்துவ சமூகத்தைச் சேர்ந்த நபர் மற்றும் சமய சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த நபர் நியாயமாக நடாத்தப்படுவர் என தெரிவிப்பவர்கள் முறையே 32.9%, 33.9% என அமைவதை ஒப்பிட முடியும்.


வரைபடம் 28. குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபர்கள் எவ்வாறு நடத்தப்படுவார்கள் என்பது குறித்த எதிர்பார்ப்பு – தேசிய ரீதியில்





வரைபடம் 29. குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் எனின் அவர் எவ்வாறு நடத்தப்படுவார் என்பது குறித்த எதிர்பார்ப்பு - இன அடிப்படையில்





வரைபடம் 30. குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபர் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர் எனின் அவர் எவ்வாறு நடத்தப்படுவார் என்பது குறித்த எதிர்பார்ப்பு - இன அடிப்படையில்




வரைபடம் 31. குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபர் சிறுபான்மை இன சமூகத்தைச் சேர்ந்தவர் எனின் அவர் எவ்வாறு நடத்தப்படுவார் என்பது குறித்த எதிர்பார்ப்பு - இன அடிப்படையில்





வரைபடம் 32. குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபர் சிறுபான்மை மத சமூகத்தைச் சேர்ந்தவர் எனின் அவர் எவ்வாறு நடத்தப்படுவார் என்பது குறித்த எதிர்பார்ப்பு - அடிப்படையில்




வரைபடம் 33. குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபர் பின்தங்கிய பொருளாதார பின்னணியைக் கொண்டவரெனின் அவர் எவ்வாறு நடத்தப்படுவார் என்பது குறித்த எதிர்பார்ப்பு - இன அடிப்படையில்



வரைபடம் 34. குற்றம்சாட்டப்பட்டிருக்கும் நபர் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவரெனின் அவர் எவ்வாறு நடத்தப்படுவார் என்பது குறித்த எதிர்பார்ப்பு - இன அடிப்படையில்



# பங்காளர் நிறுவனங்கள் குறித்து

## ஜனநாயகம் மற்றும் தேர்தலுக்கு உதவும் சர்வதேச நிறுவனம் (International IDEA)

உலகளாவிய மானிட அபிலாசையான உலகளவிலான ஜனநாயகத்தை மேம்படுத்துவதனையும், நிலைபேறான அபிவிருத்திக்காக வினையாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டு ஜனநாயகம் மற்றும் தேர்தலுக்கு உதவும் சர்வதேச நிறுவனமானது செயற்பட்டு வருகிறது. இது அரசாங்கங்களுக்கு இடையிலான ஓர் அமைப்பாகும். அனைத்து மட்டங்களிலும் ஜனநாயக அரசியல் நிறுவனங்களை கட்டியெழுப்பி, பலப்படுத்தி, பாதுகாப்பதற்கு ஆதரவு அளிப்பதன் மூலம் நாங்கள் இதனை மேற்கொண்டு வருகின்றோம். ஜனநாயக செயன்முறைகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவை அனைவரையும் உள்ளடக்குவதாகவும், பொறுப்புக்கூறக் கூடியவையாகவும், அனைவருக்கும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியை வழங்கக்கூடியவையாகவும் இருக்கும் ஒரு உலகை உருவாக்குவதே எமது தொலைநோக்காகும்.

## அரசியலமைப்பு சட்டத்துக்கான எடின்பரோ நிலையம் (ECCL)

அரசியலமைப்பு சட்டத்துக்கான எடின்பரோ நிலையமானது எடின்பரோ பல்கலைக்கழகத்தில் ஐக்கிய இராச்சியம் மற்றும் ஸ்கொட்லாந்தின் பொதுச்சட்டம், ஒப்பீட்டு ரீதியான அரசியலமைப்பு சட்டம் மற்றும் அரசியலமைப்பு கோட்பாடு என்பன தொடர்பான ஆராய்ச்சிகளை முன்னெடுக்கும் ஒரு பிரதான அமைப்பாகும். இந்நிலையத்தின் உறுப்பினர்களது அரசியலமைப்பு சார்ந்த அபிவிருத்திகள் குறித்து ஆய்வு மற்றும் ஆலோசனைப் பணிகளானது ஐக்கிய இராச்சியம், ஐரோப்பா, பொதுநலவாயம் மற்றும் அதற்கு அப்பாலும் நிகழ்கிறது. இந்த நிலையம் பொதுச்சட்டம், சர்வதேச சட்டம் மற்றும் சட்டக் கோட்பாடு, அதேபோல வரலாறு மற்றும் ஒப்பீட்டு அரசியல் போன்ற துறைகளில் செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள், மாணவர்கள் ஆகியோரை உள்ளடக்கிய பரந்த அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (Centre for Policy Alternatives)

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA) என்பது ஒரு சுயாதீனமான, பக்கச்சார்பற்ற அமைப்பாகும். அது பிரதானமாக ஆட்சி மற்றும் முரண்பாடுகளைத் தீர்த்தல் ஆகியவற்றின் மீது அவதானம் செலுத்துகிறது. இது, பொதுக்கொள்கை விவாதத்திற்கு சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதுடன் அது வலுப்படுத்தப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையால் 1996 இல் ஸ்தாபிக்கப்பட்டது. பொதுக்கொள்கைகள் விமர்சன ரீதியாக திறனாய்வு செய்யப்படல், மாற்று வழிகளை இனங்காணல் மற்றும் அதை விரிவாக்குதல் குறித்த ஆய்வு மற்றும் அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவை தொடர்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதற்கு உறுதிபூண்டுள்ளது.

முகவரி: 6/5, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5, இலங்கை
தொலைபேசி: +94(11)2081384-6
இணையதளம்: http://www.cpalanka.org/

## சோஷல் இன்டிகேட்டர் (Social Indicator)

சோஷல் இன்டிகேட்டர் (SI) என்பது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் (CPA) கருத்துக்கணிப்பு ஆய்வுப் பிரிவாகும். இது இலங்கையில் சமூக மற்றும் அரசியல் விடயங்கள் தொடர்பில் நிரந்தரமானதும், தொழில்முறையானதும் மற்றும் சுயாதீனமானதுமான ஒரு கருத்துக்கணிப்பு நிலையத்திற்கான நீண்டகால வெற்றிடத்தை நிரப்பும் வகையில் 1999ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. கருத்துக்கணிப்பு என்பது ஜனநாயகத்தை வலுப்படுத்தும் ஒரு கருவி என்ற வலுவான நம்பிக்கையின் உந்துதலால், சோஷல் இன்டிகேட்டர் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்தே ஏராளமான சமூக - பொருளாதார மற்றும் அரசியல் விடயங்கள் குறித்து கருத்துக்கணிப்புக்களை நடாத்தி வருகின்றது.

முகவரி: 6/ 1B, 1/1, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5.
தொலைபேசி: +94 11 2584050
இணையதளம்: http://cpalanka.org/survey-research/
மின்னஞ்சல்: sakina@cpasocialindicator.org

ஃஇலங்கை அரசியலமைப்பின் செயற்பரப்பு மற்றும் உள்ளடக்கம்: கருத்துருவாக்கத் தலைவர்களின் கண்ணோட்டங்கள்□ எனும் இப்பதிப்பானது நாட்டில் உள்ள நான்கு முக்கிய இனச் (சிங்களம், தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம்) சமூகங்களைச் சேர்ந்த கருத்துருவாக்கத் தலைவர்களின் அறிவு, மனோநிலை மற்றும் அபிப்பிராயங்களை மதிப்பிடும் நாடளாவிய ஆய்வின் முடிவுகளின் சாராம்சத்தை உள்ளடக்கியதாகும். இத்தலைவர்களில் மதத் தலைவர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், சமூக மட்ட அமைப்புகளின் தலைவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள் போன்றோர் அடங்குகின்றனர்.

தற்போதைய அரசியலமைப்பின் உரை மற்றும் யதார்த்தநிலை, அரசியல் ஒழுங்கின் தன்மை, ஜனாதிபதிப் பதவி, பொருளாதாரத்தின் தன்மை மற்றும் மனித உரிமைகள் என்பன தொடர்பில் கருத்துருவாக்கத் தலைவர்களின் கருத்துக்களைப் பெறும் வகையில் இன்டர்நெஷனல் IDEA இன் அரசியலமைப்பு செயல்திறன் மதிப்பீட்டு முறையை தழுவி மற்றும் உள்வாங்கி இம்மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த அரசியலமைப்பு செயல்திறன் மதிப்பீட்டாய்வானது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (CPA), ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச நிறுவனம் (International IDEA) மற்றும் அரசியலமைப்புச் சட்டத்திற்கான எடின்பேர்க் நிலையம் (ECCL) ஆகிய நிறுவனங்கள் இணைந்து மேற்கொள்ளப்பட்டதாகும்.


**International IDEA**
Strömsborg
SE-103 34 Stockholm
Sweden
Telephone: +46 8 698 37 00
Email: info@idea.int
Website: ‹https://www.idea.int›

**Edinburgh Centre for Constitutional Law**
School of Law
University of Edinburgh
Old College, South Bridge
Edinburgh EH8 9YL
Telephone: +44 01316502008

**Centre for Policy Alternative**
6/5, Layards Road
Colombo 5
Sri Lanka
Telephone: +94(11)2 081384-6
Website: ‹http:/ www.cpalanka.org›

**Social Indicator**
No: 6/ 1B , 1/1, Layards Road
Colombo 05
Sri Lanka
Telephone: +94112 584050

ISBN: 978-91-7671-517-8 (PDF)